**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 164/2023**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகநாதன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 11th, 2025.

**(7 மற்றும் 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி மாரியப்பனை எனக்கு தெரியும். இதர எதிரிகளை தற்போது பார்க்கும்போது எனக்கு அடையாளம் தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பஜகத்அலி, நல்லிச்சாமி ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். நான் அந்த கையெழுத்துக்களை பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன்.

சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் பாவூர்சத்திரம் காவல் ஆய்வாளர் அகஸ்தியர்பட்டிக்கு என்னையும், ராமர்கனியையும் அழைத்து சென்றார். ஒரு நபரிடமிருந்து ரூ.1,59,000/- போலீசார் கைப்பற்றினார்கள்.அவர் யாரென்று என்னால் தற்போது அடையாளம் காட்ட முடியாது, ஞாபகமில்லை. கார் ஒன்றும் கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் மட்டும் **அ.சா.ஆ.12, 13** ஆகும். அத்தாட்சியில் உள்ள கையெழுத்துகள் மட்டும் **அ.சா.ஆ.14, 15, 16** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அகஸ்தியர்பட்டியில் எந்த இடம் என்று என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது.

**<u>மறுவிசாரணை</u> -**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:38:33 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 164/2023**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குத்தாலிங்கம் | தொழில் | : | மெக்கானிக் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 11th, 2025.

**(7 மற்றும் 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி மாரிஸ்வரனின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். என்னுடைய உறவினர் ஒருவர் வீட்டில் நகை காணாமல் போனது. என்னை போலீசார் விசாரித்தார்கள். அது சம்பந்தமாக 2 எதிரிகளை பிடித்து வைத்திருப்பதாக போலீசார் தகவல் சொன்னார்கள். பணமும், நகையும் அடையார்குளத்தில் உள்ள சொக்கலிங்கம் கணேசன் வீட்டில் இருந்து போலீசார் கைப்பற்றியதாக சொன்னார்கள். வேறு எனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.17** ஆகும்.

அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.18** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அடையார்குளத்தில் எந்த தெரு, எந்த வீடு என்று என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் உள்ளூரை விட்டு வெளியூர் செல்லமாட்டேன். நான் என் அண்ணாச்சி வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2025.09.11 17:38:44 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 164/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW-10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமச்சந்திரன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 11th, 2025.

**(7 மற்றும் 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி மாரிஸ்வரனின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என்னுடைய பெரியப்பா வீட்டிலிருந்த நகைகள் கொள்ளை போனது. 4, 5 நாட்கள் கழித்து பாவூர்சத்திரம் ஆய்வாளர் என்னை அழைத்தார். கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை கைது செய்ததாகவும், அவர்களிடமிருந்த நகைகளை கைப்பற்றும்போது நான் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். எதிரி மாரீஸ்வரன் அடையார்கருங்குளத்தில் உள்ள ஒரு வீட்டிலிருந்து நகைகளை எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்தார். அதனை அத்தாட்சி பிறப்பித்து போலீசார் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நான்

கையெழுத்து செய்தேன். நிறைய நகைகள் என்பதினால் தற்போது என்னால் குறிப்பிட்டு நகைகளின் விபரம் சொல்ல முடியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.19** ஆகும். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.20** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அடையார்கருங்குளத்தில் எந்த தெரு, எந்த வீடு என்று என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் அடையார்கருங்குளத்திற்கு இன்ஸ்பெக்டருடன் சென்றேன். ஆஜர் எதிரிகளில் அனைவரின் பெயரும் எனக்கு தெரியாது. நான் சொல்லும் நாளில் ஆய்வாளருடன் நான் செல்லவில்லை என்றாலும், என் முன்னிலையில் எந்த நகைகளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:38:51 +0530